THE HINDU
29 SEP 2022
PAGE 3

Thursday, September 29, 2022
CHENNAI

# Central varsity V-C granted one-year extension

**The Hindu Bureau**
PUDUCHERRY

Gurmeet Singh has been granted a one-year extension as Vice-Chancellor of Pondicherry Central University.

The Education Ministry has notified the extension, which was granted by President Droupadi Murmu in her capacity as Visitor of Pondicherry University.

DINATHANTHI

29 SEP 2022

PAGE 11

### புதுவை பல்கலைக்கழக

# துணைவேந்தர் பதவிக்காலம் ஓராண்டு நீடிப்பு

புதுச்சேரி, செப்.29-

புதுவை பல்கலைக்கழக துணைவேந்தராக குர்மீத்சிங் பதவி வகித்து வருகிறார். அவரது பதவிக்காலம் வருகிற நவம்பர் மாதம் 23-ந்தேதி முடிய உள்ளது. இதற்கிடையே புதிய துணை வேந்தரை நியமிப்பதற்காக பணிகள் நடந்து வந்தன.

இந்தநிலையில் குர்மீத் சிங்கின் பதவிக்காலத்தை ஓராண்டு நீட்டித்து ஜனாதிபதி திரவுபதி முர்மு அனுமதித்துள்ளார். இதற்கான உத்தரவினை மத்திய உயர்கல்வித்துறை சார்பு செயலாளர் நவீன்குமார் வெளியிட்டுள்ளார்.

DINAMANI

29 SEP 2022

PAGE 5



# புதுவை மத்தியப் பல்கலை. துணைவேந்தரின் பதவிக்காலம் ஓராண்டுக்கு நீட்டிப்பு

**புதுச்சேரி, செப். 28:** புதுவை மத்தியப் பல்கலைக்கழகத் துணைவேந்தரின் பதவிக்காலம் மேலும் ஓராண்டுக்கு நீட்டிக்கப்பட்டது.

இதுகுறித்து புதுவை மத்திய பல்கலைக்கழகம் புதன்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு புதுவை மத்தியப் பல்கலைக்கழகத்தின் பார்வையாளராக உள்ளார். அதனடிப்படையில், புதுவை மத்தியப் பல்கலைக்கழக சட்டப்படி, தற்போது துணைவேந்தராக உள்ள பேராசிரியர் குர்மீத் சிங்கின் பதவிக் காலத்தை, மேலும் ஓராண்டுக்கு நீட்டித்து குடியரசுத் தலைவர் உத்தரவிட்டார். இதை மத்திய கல்வி அமைச்சகம் அதிகாரப்பூர்வமாக தெரிவித்தது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.